**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 27-2022**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 12.03.2024**

| | |
|---|---|
| **Name :** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1,2,3 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் மேச்சேரியில் குடியிருந்து ஒட்டுனராக வேலை செய்கிறேன். அ.சா1 எனது தாயார் ஆவார். அ.சா2 சித்ரா எனது பக்கத்து வீட்டுகாரர் ஆவார். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பாக மாலை 7.30 மணிக்கு மேல் நான் வண்டியில் இருந்து இறங்கி வீட்டிற்கு சென்ற போது, எதிரி ஈஸ்வரன் மற்றும் சுமதி, பச்சியம்மாள் ஆகியோர் அ.சா.1 ஐ கெட்ட வார்த்தையால் ஒத்த ஓம்மா என்று திட்டினார்கள். பிறகு நான் இது பற்றி கேட்ட போது, எதிரிகள் என்னை சத்தம் போட்டனார். பிறகு எதிரிகள் பேசி கொண்டிருந்த போது, எதிரி ஈஸ்வரன் என்னை கழுத்தில் கையால் அடித்தனர். எதிரி ஈஸ்வரன் மற்றும் சுமதி இருவரும் சேர்ந்து எனது தாயாரை கட்டையால் இடது கையில் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள். இதனால் கை உடைந்து விட்டது. பிறகு அ.சா1 மற்றும் என்னை கீழே தள்ளி அவர்கள் எங்களை தாக்கினார்கள். பிறகு அருகில் இருந்தவர்கள் விலக்கி விட்டனார். பிறகு அடிபட்ட எனது தாயரை சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகச்சைக்கு சேர்த்தோம்.

2) எதிரிகளை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. சின்ன சின்ன காயம் ஏற்பட்டதால் நான் மருத்துவமனை

செல்லவில்லை. போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) எனக்கும், எதிரிகளுக்கும் ஏற்கனவே பண வரவு செலவு உள்ளதாக என்றால் 7–8 வருடத்திற்கு முன்பாக இருந்ததது. தற்போது இல்லை. அது சம்பந்தமாக பிரச்சனை இல்லை என்றால் சரிதான். எனக்கு திருமணமாகவில்லை என்றால் சரிதான். நான் லாரி ஓட்டுனராக உள்ளேன் என்றால் சரிதான்.எனக்கு குடிபழக்கம் உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தை சித்ரா என்பவர் நேரில் பார்த்தார்களா என்றால் இல்லை. சித்ரா நேரில் பார்த்தாக சொல்லி இருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

4. என்னையும் எதிரிகள் அடித்தார்கள் என்றும், அதனால் எனக்கு சின்னசின்னகாயம் ஏற்பட்டதாக போலிசார் விசாரிக்கும் போது சொல்லவில்லை என்றால் சரிதான். சின்ன சின்னகாயம் என்பதால் சொல்லவில்லை. என்னை அடித்த விபரத்தை போலிசார் விசாரிக்கும் போது சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன்.

5. நான் சென்று எதிரிகளை என்னவென்று கேட்டேன் என்றும், பிறகு தான் சண்டை ஆரம்பித்தது என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். கைகலப்பு ஏற்படும் போது நான் எத்தனை முறை அடித்தேன் என்றால் அவர்களை அடிக்கமுடியவில்லை. நானும் எதிரியும் சண்டைபோடும் போது யாரும் விலக்கவில்லை என்றால் எனது தாயார் வந்த விலக்கிவிட்டனர்.

6. நான் விலக்கி விட்ட பிறகு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் என்னை எதிரி பிடித்துகொண்டுஇருந்தார்கள். இந்த விபரத்தை போலிசார் விசாரிக்கும் போது சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். எனது தாயார் என்ன புகார் வாக்குமுலம் கொடுத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னை போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் மறுநாள் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள்.உண்மையாக எனது தாயாருக்கு அடிபட்டு இருந்தால் எனது தாயருடன் மருத்துவமனைக்கு சென்று இருப்பேன் என்றும், காவல் நிலையம் சென்று இருக்கமாட்டேன் என்றால் எனது

தாய்மாமன் மகன்கள் எனது தாயரை அழைத்து சென்றார்கள்.

7. எனது தாய்மாமன் மகன்கள் அ.சா1 யை அழைத்து சென்றார்கள் என்றால் இல்லை. நான் மது அருந்தி விட்டு வந்த போது தான் என்னால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரி சுமதி எத்தனை வயது இருக்கும் என்றால் 39 வயது இருக்கும். சுமதியின் மகளுக்கு 18 வயது இருக்கும். நான் மது அருந்தி விட்டு நான் வீதியில் வந்து பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான தான் பிரச்சனை ஏற்பட காரணம் என்றால் சரியல்ல.

8. சம்பவம் எப்படி வந்ததது என்றால் ஈஸ்வரன் வந்ததால் தான் பிரச்சனை ஏற்பட்டது. அடித்தாக சொல்லபடும் கட்டையை போலிசார் சம்பவ இடத்தை பார்வையிடும் போது கைபற்றினர்கள் என்றால் இல்லை. நானும் கட்டையை எடுத்து சென்று காவல் நிலையத்தில் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. நானும் எதிரியும் பிரச்சனை செய்ததால் தள்ளு முள்ளு ஏற்பட்டு எனது தாயார் கீழே விழுந்ததால் காயம் ஏற்பட்டது என்றால் இல்லை. சம்பவம் எனது வீட்டு வாசலில் நடந்ததது என்றால் ஆமாம். சாட்சி சித்ரா அவர்களுக்கும் எதிரிகளுக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான்.

9). எதிரிகள் பேச்சு வார்த்தை பேசியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அ.சா. 1ஐ அடித்தாக சொல்வது பொய் என்றும், எதிரிகளுக்கும் எனக்கும் முன்விரோதம் இருக்கும் காரணத்தால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை எத்தனை பேர் நேரடியாக பார்த்திருப்பார்கள் என்றால் 5-6 பேர் சுற்றிலும் உள்ள நபர்கள் பார்த்திருப்பார்கள். அவர்களை போலிசார் விசாரித்து வாக்குமுலம் பெற்றார்களா என்றால் ஆமாம். தேதி மாதம் சம்பவம் குறித்து தெரியுமா என்றால் நினைவில்லை. எதிரிகளுக்கும் காயம் ஏற்பட்டது என்றால் இல்லை. நான் தடுப்பதற்கு எதுவும் செய்யவில்லை என்றால் ஆமாம். என்னால் அடிக்கமுடியவில்லை.

மறுவிசாரணை இல்லை.

ஓம்/- தே. மயில்சாமி,
குற்றவியல் நீதித்துறை எண். 2
மேட்டுர்.